Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 04
வியாழக்கிழமை
30 நவம்பர் 2023
கார்த்திகை 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



எல்லாரும் அம்மனிட்ட போய் முறையிடுவினம். அந்த அம்மனே காணாமல் போனால் எங்க போய் முறையிட?

## புலிகள் பாணியில் உடை விசாரணைகள் தீவிரம்!

யாழ்ப்பாணம், நவ.30
கோப்பாயில் நடந்த மாவீரர் நினைவேந்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் போராளிகளின் உடை போன்ற உடை சிறுவர்களுக்கு அணிவிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக, குறித்த சிறுவர்களின் பெற்றோர் 6 பேர் அழைக்கப்பட்டு நேற்று விசாரணை நடத்தப்பட்டுள்ளது. திருநெல்வேலி, கலாசாலை வீதி மற்றும் உரும்பிராய் மேற்கை வதிவிடமாகக் கொண்டவர்களுக்கே அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டு விசாரணைக்கு

11

## பொலிஸ்மா அதிபர் இழுபறிக்கு முடிவு!

தேசபந்துவுக்குப் பதவி



கொழும்பு, நவ.30
பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்ட சி.டி.விக்ரமரத்ன

11

## புலிச்சின்ன 'ரீ-சேர்ட்' அணிந்தவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ.30
மாவீரர் தின அஞ்சலியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் படம் மற்றும் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ-சேர்ட் அணிந்த இளைஞன் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இளைஞரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இளைஞர் குற்ற மனப்பாங்குடன் நடக்கவில்லை, அவரது செயலால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டால் அதை அறியலாம் என்று இளைஞர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.
இது தொடர்பான விசாரணை இன்னமும் முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்ததை அடுத்து சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டதுடன், விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டது. (அ-எ-66)

கொக்குத்தொடுவாயில்

# மனிதப்புதைகுழி; அகழ்வு நிறுத்தம்!

அடுத்த கட்டம் மார்ச் மாதம்
இதுவரை 39 எலும்புக்கூடுகள் மீட்பு

**முல்லைத்தீவு, நவம்பர் 30**
**கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் இதுவரை 39 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இரண்டாம் கட்ட அகழ்வாய்வு நடவடிக்கைகள் நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளன.**

11

## மல்கம் எதிர்ப்பு

கொழும்பு, நவ.30
பதில் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு கடுமையான எதிர்ப்பை கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளிப்படுத்தியுள்ளார்.

11

## இளைஞர் கைது

முல்லைத்தீவு, நவ.30
புதுக்குடியிருப்பில் பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 29 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று

11

## போலி ஆவணங்கள் தயாரித்து ஓட்டோ விற்ற படைச்சிப்பாய்

தேடிப் பிடித்து கைது செய்தது
மாவட்ட விசேட குற்றத்தடுப்புப்பிரிவு

யாழ்ப்பாணம், நவ.30
தென்னிலங்கையில் திருடப்பட்ட முச்சக்கர வண்டிக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து கிளிநொச்சியில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடற்படை சிப்பாய் ஒருவர் யாழ்.மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
முச்சக்கரவண்டி ஒன்றின் ஆவணங்கள் யாழ்.மாவட்ட போக்குவரத்துத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அவை போலியானவை என்று கண்ட

11

## அம்மன் மாயம்!

யாழ்ப்பாணம், நவ.30
உரும்பிராய் காளிகோயிலில் ஐம்பொன் அம்மன் சிலை திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

11

## பரிஸ் கிளப் மகிழ்ச்சி

கொழும்பு, நவ.30
உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுக்கும், இலங்கைக்கும் இடையே கடன் மறுசீரமைப்புத் தொடர்பாகக் கொள்கை அடிப்படையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்று பரிஸ் கிளப் தெரிவித்துள்ளது.

11

## "மீற்றர் வட்டி" மாபியாக்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு



தகவல் தந்தால் நடவடிக்கை
மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.30
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மீற்றர் வட்டிக்குப் பணம் கொடுப்பது, வட்டி கோரி மிரட்டுவது போன்ற சம்பவங்கள் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் வழங்கவேண்டும் என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ்வாறான சம்பவங்கள் அதிகம் நடைபெறுகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. வட்டிக்காக சொத்துகளை மிரட்டிப் பறிக்கும் சம்பவங்களும் நடக்கின்றன என்று கூறப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் தகவல்களை வழங்கினால் துரிதகதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொதுமக்கள் எவ்வித அச்சமும் இன்றி தகவல்களை யாழ்ப்பாணத்தில் உள்ள எனது அலுவலகத்திலோ அல்லது எனக்கோ தெரிவிக்க முடியும் என்றும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (அ-எ-26)

## அதிபர் மீது வாள்வெட்டு; கொக்குவிலில் பயங்கரம்!

யாழ்ப்பாணம், நவ. 30
வீடு புகுந்து நடத்தப்பட்ட வாள்வெட்டில் அதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கு பிடாரி கோவில் பகுதியில் கடந்த 27ஆம் திகதியன்று இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்புக் கமராப் பதிவுகளின் உதவியுடன் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் 3 ஆண்டுகளில் மீள்குடியேற்றம் நிறைவு

## அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 30

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அடுத்த மூன்று வருடங்களுக்குள் மீள்குடியேற்ற நடவடிக்கையை முற்றாக நிறைவுசெய்வதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றகுழுநிலைவிவாதத்தின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றத்துக்காக பல்வேறு தரப்பின் ஆதரவுடன் அரசால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து847வீடுகள்நிர்மாணிக்கப்பட்டு, மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் ஆயிரத்து 700 வீடுகளின் பணிகள் முழுமை பெறாமல் இருந்தது. அவற்றில் ஆயிரத்து 104 வீடுகளின் பணிகள் முழுமை பெற்றுள்ளன.

இந்த வருடத்தில் மேலும் ஆயிரத்து 665 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கான பணிகளை நிறைவு செய்வதற்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு வசதிக்காக மேலும் 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அடுத்த மூன்று வருடங்களுக்குள் மீள்குடியேற்ற நடவடிக்கையை முற்றாக நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2024 - 2027 காலப்பகுதிக்குள் கண்ணிவெடி அற்ற நாடாக இலங்கை மாறும் - என்றார். (ஒ-44)

# புகைத்தலுக்குத் தடை நியூஸிலாந்தில் சட்டம்

கொழும்பு, நவ. 30

நியூஸிலாந்து அரசாங்கம் புகைப்பிடித்தலை தடைசெய்யும் வகையில் எதிர்வரும் ஆண்டு ஜூலை மாதம் முதல் சட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதுதொடர்பில் அந்த நாட்டின் பிரதமர் குறிப்பிட்டதாவது:-

புகைப்பிடிப்பதன் காரணமாக ஆண்டுதோறும் 5 ஆயிரம் பழங்குடியினர் மரணிப்பதாக நியூஸிலாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். புகைப்பிடிப்பதனால் ஏற்படும் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக நியூஸிலாந்து அரசாங்கம் ஆண்டு தோறும் 1.3 பில்லியன் டொலரை செலவிடுகிறது - என்றார்.

இதேவேளை, புகைப்பிடித்தல் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் புகைப்பிடித்தலை தடைசெய்த முதல் நாடாக நியூஸிலாந்து விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)

# ஒத்திசையாவிடின் தூக்கி வீசப்படுவீர்!

## அரசின் நியதி இதுவே சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 30

அமைச்சுப் பதவிகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கு ஆமாம் சாமி போடவேண்டும். இல்லாவிடின் பதவி நீக்கப்படுவீர்கள் என்ற சிவப்பு எச்சரிக்கையையே ரொஷான் ரணசிங்க ஊடாக ஜனாதிபதி அமைச்சர்களுக்கு விடுத்துள்ளார்.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சுட்டிக்காட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை கிரிக்கெட்சபைக்கு எதிரான தீர்மானத்துக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினார்கள். இந்தத் தீர்மானத்துக்கு முரணாக, தற்போது அமைச்சரவை பதவி நீக்கிவிட்டு ஊழல் குழு பாதுகாக்கப்பட்டுள்ளது. கொள்ளை இடம்பெற்றாலும் திருடர்களைப் பிடிக்க வேண்டாம். பதவிகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இல்லாவிடின் ரொஷானுக்கு நடந்தது போன்று நடக்கலாம் என்று சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வரலாற்றில் முதற் தடவையாக மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதியால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் - என்றார். (ச-44)

# விபத்தில் பசு உயிரிழப்பு

பளை, நவ. 30

வீதியில் படுத்திருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பசு வாகனத்தில் மோதுண்டு நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளது. (ஒ-9)

# திருகுதாளம் வேண்டாம்

## ஹக்கீம் கோரிக்கை



கொழும்பு, நவ. 30

திருகுதாளங்களுக்குத் துணை போகாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ள தேர்தல்களை நடத்துவதற்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனையில் தமிழ்ப் பிரதேச செயலகம், முஸ்லிம் பிரதேச செயலகம் என வைத்துக்கொண்டு அதற்கு ஒரு கணக்காளரை நியமிக்கவில்லை என சித்தார்த்தன் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும். பாரபட்சம் இல்லாத எல்லை மீளமைப்பு இடம்பெற வேண்டும்.

அதேவேளை, ஜனாதிபதியின் திருகுதாளங்களுக்குத் துணை போகாமல் தேர்தல்களை நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்ட பிரதமர் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-44)

# பொலிஸ்மா அதிபர்கள் சேவைக்காலம் குறுக்கம்

கொழும்பு, நவ. 30

பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவோரின் பதவிக்காலத்தை அதிகபட்சமாக 3 வருடங்களுக்கு மட்டுப்படுத்தும் யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்படி ஒருவர் பொலிஸ்மா அதிபராக பதவியேற்று மூன்று வருடங்கள் கழித்து ஓய்வுபெற வேண்டும். (ச-இ)

# அரச காணிக்குள் திருடர் கைவரிசை

## மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 30

உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை பகுதியிலுள்ள துறைமுக அதிகாரசபையின் காணிக்குள் காணப்படும் சிமெந்துத் தூண்கள் திருடர்களால் களவாடப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட இந்தப் பிரதேசங்களில் இராணுவத்தினர் தற்போது வெளியேறியுள்ளனர். அங்குள்ள துறைமுக அதிகாரசபையின் காணிக்குள் பெரியளவிலான சிமெந்துத் தூண்கள் துறைமுக அபிவிருத்திக்காக வைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் அந்தக் காணிக்குள் அத்துமீறி நுழையும் திருடர்கள் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான பெறுமதியான பல சிமெந்துத் தூண்களை உடைத்து கம்பிகளைக் களவாடிச் செல்கின்றனர்.

இதுதொடர்பில் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்குத் தகவல் வழங்கப்பட்டபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை - என்றனர்.

இதேவேளை வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் உப அலுவலகம் திருட்டு நடைபெறும் காணிக்கு அருகே அமைந்துள்ளது என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-26)

# நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி நகர்வு!

## ஐ.தே.க. சுட்டிக்காட்டு

இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கு நிர்வாகப் பொறிமுறை பலப்படுத்தப்பட்டு நகர்வுகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடு வங்குரோத்தாகியுள்ள நிலையிலேயே வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதியில் வங்குரோத்து நிலையை நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். தோல்வி அடைந்தாலும் நாட்டுக்காக முன்னிலையாகும் ஆளுமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கின்றது - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30.11.1941

மறைவு 21.11.2013



## கந்தையா சோதிலிங்கம் (கற்பக சோதி)

யாழ் ஈச்சமோட்டை பாண்டியந்தாழ்வை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா சோதிலிங்கம் அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவலை

எங்கள் அன்புத் தெய்வம் அய்யா
ஆண்டுகள் பல சென்றாலும்
உங்களுடன் கூடி வாழ்ந்த காலங்கள்
என்றும் பசுமையானவை. உங்கள்
வழிகாட்டல்கள் எங்களை வழிநடத்தும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


## சுகாதாரத்துறை முறைகேடு விசாரிப்பதற்கு 3 குழுக்கள்

சுகாதார அமைச்சில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும், தரமற்ற மருந்து இறக்குமதி உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில், முன்னாள் சுகாதாரச் செயலாளர் உட்பட சுமார் 30 சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டுக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதில் கடைப்பிடிக்கப்பட்ட செயல்முறை தொடர்பாக விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் நாள்களில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடமும் வாக்குமூலம் பெறப்படும் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# பொது நிறுவனமாகும் அரச அலைவரிசைகள்



கொழும்பு, நவ. 30

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தொடர்ந்தும் நட்டத்தை ஈட்டும் நிறுவனங் களாகக் காணப்படுவதால் அவற்றை பொது நிறுவனங்களாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். இந்த அலைவரிசைகளுக்கு திறைசேரியிலிருந்து மேலும் நிதியை வழங்குவது கடினம். இந்த விடயத்தில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்க அமைச்சரவை தீர்மானித் துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மீளளிக்கப்பட்டன தொல்பொருள்கள்

கொழும்பு, நவ. 30

இலங்கையிலிருந்து ஒல்லாந்தர் எடுத்துச்சென்ற வரலாற்றுப் பெறுமதிமிக்க 6 தொல்பொருள்களை மீளக் கையளித்துள்ளது நெதர்லாந்து அரசாங்கம். 1756ஆம் ஆண்டு ஒல்லாந்தர் கண்டி அரச மாளிகையைத் தாக்கி அங்கிருந்து சூறையாடப்பட்ட 6 தொல்பொருள்களே கையளிக்கப்பட்டன. இதில் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னரின் திருமண வாள், மன்னரின் தங்கக் கத்தி, இயந்திரத் துப்பாக்கி மற்றும் இரண்டு பெரிய துப்பாக்கிகள் உள்ளிட்டவை அடங்குகின்றன. இந்தத் தொல்பொருள்களை நெதர்லாந்து இலங்கைக்குக் கையளிக்கும் நிகழ்வு கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ச-6)



# தினம் தெரியுமோ?

மாவீரர் நாளுக்கு புலிச்சின்னம் போட்ட ரீசேர்ட்டோட போன பெடியனைப் பிடிச்ச சூடாறுறதுக்குள்ள, இன்னும் சிலரிட்ட பொலிஸ்காரர் வாக்குமூலம் பதிவுசெய்திருக்கினம். தங்கட பிள்ளையளுக்கு இயக்கப் பிள்ளையள் மாதிரி உடுப்புப் போட்டு, இடுப்பில விளையாட்டுத் துப்பாக்கி, கழுத்தில சயனைட் குப்பி, நம்பர்த்தகடு எண்டு மேக்கப் போட்டு அனுப்பினவைக்குத்தான் இந்த விசாரணை. அவையிட்ட இப்ப வாக்குமூலம் எடுத்திட்டு விட்டாலும், விசயம் வில்லங்கமா மாறும் எண்டமாதிரித்தான் தகவல்கள் வருகுது.

மாவீரர்நாள் எண்டது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் மடிஞ்சு போன ஆன்மாக்களுக்கு அஞ்சலி செய்யிற ஒரு புனிதமான நிகழ்வே தவிர, வினோத உடைப்போட்டி மாதிரி விதம் விதமா வெளிக்கிட்டு வந்து 'படம் காட்டுற' பண்டிகையில்லை. அதைவிட ஒருத்தர் தன்ர பிள்ளைக்கு இயக்க உடுப்புப் போட்டு காலமை கோப்பாய்க்கு போய் படங்கள் எடுத்து அதை பேஸ்புக்கில போட்டிட்டு, பின்னேரம் கிளிநொச்சி கனகபுரத்துக்கும் பிள்ளைக்கு அதே இயக்க உடுப்புப்போட்டுக்கொண்டு அங்கையும் படம் காட்டியிருக்கிறார். 'எங்க பிழை நடக்கும்? என்ன சாட்டுச் சொல்லி மாவீரர் நாளைக் குழப்பலாம்?' எண்டு பார்த்துக் கொண்டிருக்கிற பொலிஸுக்கும், ஆமிப் புலனாய்வுக்காரருக்கும் நாங்களே 'இந்தாங்கோ பொல்லு' எண்டு அவையின்ர கையில குடுத்து அடிவாங்கிற வேலையை மட்டும் வடிவாச் செய்யிறம். இப்பிடி புலிச்சின்ன உடுப்பு, சயனைட் குப்பி, இயக்கநம்பர் தகடு, விளையாட்டு பிஸ்டல் எண்டு புலிகளுக்குத் திரும்ப உயிரூட்டுற வேலைக்குத்தான் மாவீரர்நாளைப் பாவிக்கினம், சின்னப்பிள்ளையளின்ர மனதில விசத்தை விதைக்கினம் எண்டு அடுத்த வருசம் நீதிமன்றங்களில பொலிஸ்காரர் போட்டோ ஆதாரங்களோட கேஸ் போட்டால், பிறகு மாவீரர்நாளையே நினைவேந்த முடியாதமாதிரிப் போடும்.

இப்ப கிடைக்கிற இடைவெளிக்குள்ள எப்பிடி இன்னும் இந்த நினைவேந்தல்களை வடிவா செய்யலாம் எண்டு பாக்கவேணுமே தவிர, இருக்கிற சூழலையும் கெடுக்கிற மாதிரியான வேலையளைச் செய்தால் அது ஒட்டுமொத்த இனத்துக்கும் தான் சிக்கல். பேஸ்புக்கில லைக்ஸ் வாங்கவேணுமெண்டதுக்காகவோ, இல்லாட்டி இப்பிடி இயக்க உடுப்புப்போட்டுக்கொண்டு போனால் தங்கட பிள்ளையளிண்ட படம் பேமஸாகும் எண்ட நினைப்பிலையோதான் அந்தப் பிள்ளையளின்ர பெற்றார் இந்த வேலையைச் செய்திருக்கவேணும். அதோட இதுக்குப் பின்னால ஒரு கட்சிக்காரரும் இருக்கினமாம். அவைதான் தங்கட கட்சியின் ஆதரவாளர்களிட்டச் சொல்லி அவையின்ர பிள்ளையளை இயக்கம் மாதிரி வெளிக்கிடுத்திக் கொண்டு வரச்சொன்னவையாம். எல்லாரும் தங்கட லாபத்துக்காக மாவீரரையும் சின்னப் பிள்ளையளையும் அடகுவைக்கினம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவதாரணி அறிவூட்டல்

மன்னார், நவ. 30
மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலையில் சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவின் ஒழுங்குபடுத்தலில் மாணவர்களுக்கான 'சுவதாரணி' அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு ஆயுள்வேத மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டதுடன், போட்டிகள் வைக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் நகர பிரதேச செயலாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர், அமைச்சின் பணிப்பாளர், பாடசாலை அதிபர், ஆயுள்வேத வைத்தியர்கள், கிராமமட்ட அலுவலர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-75)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# தேசிய மட்ட எறிபந்துப் போட்டியில் கனகராயன்குளம் ம.வி. மூன்றாமிடம்

வவுனியா, நவ. 30
தேசிய மட்ட எறிபந்தாட்டப் போட்டியில், வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் 20 வயதுக்குட்பட்ட அணியினர் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளனர். (ரி-75)




# 400 ஹெக்ரேயரில் கோப்பிச் செய்கை!

## பட்ஜெட்டில் நிதியொதுக்கீடு

கொழும்பு, நவ. 30
அடுத்த வருடத்தில் 400 ஹெக்ரேயரில் கோப்பியைப் பயிரிடுவதற்கு வரவு- செலவுத் திட்டத்தில் 400 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போது பிரதான தோட்டப் பயிராக்க் கோப்பிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாவிட்டாலும், வெளிநாட்டுச் சந்தையில் கோப்பிக்கு அதிக கேள்வி காணப்படுகிறது.

அந்தவகையில் மீண்டும் நாட்டில் கோப்பிச் செய்கையைத் தோட்டப் பயிராக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அரேபிகா கோப்பி, ரோபஸ்டா கோப்பி, லைபெரிகா கோப்பி ஆகிய இனங்கள் இங்கு வளர்க்கப்படுகின்றன. இவற்றில் அரேபிகா கோப்பிக்கு அதிக கிராக்கியுண்டு. அந்தக் கோப்பி சாகுபடிக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார். (ச-இ)



# நடன, இசைப் போட்டிகளில் உடுவில் மகளிர் ஆதிக்கம்

இலங்கை தேசிய மட்டப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் சிலர் தேசிய மட்டத்தில் சிறந்த அடைவுகளை நிலைநாட்டியுள்ளனர்.

தேசியமட்ட தனி நடனத்தில் அபிசனா கோபிநாத் முதலிடத்தையும், பல்லிய குழு, தனி வயலின் ஆகிய போட்டிகளில் கேதுசா யுவராஜ், அபிசனா கோபிநாத் முதலிடத்தையும், தனிப்பாடலில் நிசாயினி செல்வநாயகம் முதலிடத்தையும் பெற்றுள்ளனர். (ரி-125)

# முன்பள்ளிக்குக் கட்டடம்

வவுனியா, நவ. 30
வவுனியா வடக்கு நெடுங்கேணி ஆலங்குளம் பிள்ளையார் முன்பள்ளிக்கென, புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் புலம்பெயர்ந்தோரின் நிதிப்பங்களிப்புடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது. நிகழ்வில் கிராம அலுவலர், கல்வி வலய அதிகாரிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் ஏற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-19)





# கஞ்சாவுடன் பெண் கைது

மன்னார், நவ. 30
மன்னார் பேசாலைப் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ 30 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. (ஒ-60,213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விரிவடையும் புதைகுழிகள்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி நாம் அனைவரும் சந்தேகப்பட்டதை விடவும், நிபுணர்கள் எதிர்வுகூறியதை விடவும் பல மடங்கு பெரிதாக இருப்பதற்கான அத்தனை ஏது நிலைகளும் தென்படத் தொடங்கியிருக்கின்றன. கொக்குத்தொடுவாயில் தற்போது அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பகுதி, புதைகுழியின் சிறு துண்டே என்றும், வீதிக்குக் கீழ்ப்பகுதி வரை புதைகுழி விரிவடையலாம் என்றும் அதிநவீன ஸ்கான் ஆய்வில் மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அங்கிருந்து வெளிவரும் கள ஆய்வுத் தகவல்களும்கூட இதையேதான் சொல்கின்றன. இறுதிப்போர் தொடர்பான விடயங்கள் எப்போதெல்லாம் வெளிச்சத்துக்கு வருகின்றனவோ - எப்போதெல்லாம் இவ்வாறான விடயங்கள் பேசுபொருள் ஆகின்றனவோ, அப்போதெல்லாம் ஒருவித மெத்தனப்போக்கையே அரசாங்கம் கைக்கொண்டது. அதன் தொடர்ச்சியாகவே கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்திலும் அரசாங்கம் நடந்துகொண்டது. இந்தப் புதைகுழி தொடர்பான தகவல்கள் வெளிவந்த ஆரம்ப நாள்களில் 'போர் இடம்பெற்ற பகுதியில் மனிதப்புதைகுழிகளும் இருக்கவே செய்யும்' என்று வெகு சாதாரணமாகக் கருத்துத் தெரிவித்திருந்தார் நீதி அமைச்சரான விஜயதாஸ ராஜபக்ச.

ஆனால் இங்கே முரண்நகை என்னவென்றால், நீதி அமைச்சர் சொல்வதைப்போன்று போர் இடம்பெற்ற பகுதிகளில் மனிதப்புதைகுழிகள் இருக்கவேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. சர்வதேசப் போரியல் விதிமுறைகளுக்கும் போர்க்குற்றங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை. எந்தவொரு போர் சர்வதேச விதிகளுக்கு முரணாகப்போகின்றதோ - ஏற்றுக்கொள்ளப்பட்ட போரியல் நிபந்தனைகளை எல்லை மீறுகின்றதோ அப்போதுதான் 'மனிதப் புதைகுழிகளின்' தேவை அங்கு உணரப்படும். மற்றும்படி, நீதியான - நியாயமான போருக்கும் மனிதப்புதைகுழிகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை. குர்திஷ்தான் - சிரியா - ஈராக் முதல் தற்போது உக்ரைன் - ரஷ்யா இடையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போர்வரையில் இனங்காணப்பட்ட அத்தனை மனிதப் புதைகுழிகளும் அந்தந்தப் பகுதியில் இடம்பெற்ற போர்க்குற்றத்தையே பறைசாற்றின. இவ்வாறானதொரு பின்னணியில், கொக்குத்தொடுவாயில் இனங்காணப்பட்டிருக்கும் மனிதப்புதைகுழி பலமான ஐயங்களையே பறைசாற்றி நிற்கின்றது.

அத்துடன், இறுதிப்போரின் பின்னர் இலங்கையில் மனிதப்புதைகுழி தொடர்பான கருத்தியல்கள் தோற்றம்பெறுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. இதற்கு முன்னரும் விரல்விட்டு எண்ணமுடியாத எத்தனையோ மனிதப்புதைகுழிகள் தாயகத்திலும், தென்னிலங்கையிலும் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த மனிதப்புதைகுழிகள் அதிகாரக் கதிரைகளின் அழுத்தத்தால் மூடி மறைக்கப்பட்டனவே அன்றி நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகளை எதிர்கொள்ளவேயில்லை. இவ்வாறானதொரு நிலையில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்திலும் நீதி கிட்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழர்களுக்கு இல்லவேயில்லை. ஆனால், ஒட்டுமொத்த மனிதப் புதைகுழி விவகாரங்களிலும் சர்வதேசம் தலையிடுவதற்கான ஓர் ஆரம்பப்புள்ளியாக இந்த விவகாரம் அமையவேண்டும் என்ற ஏக்கம் தமிழர்களிடத்தில் மிகைந்திருக்கின்றது. இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும், மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தும் சர்வதேசம், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகள் போன்ற பெரும் பிடிமானங்கள் கிட்டுகின்றவேளையில் காக்கின்ற மௌனம்தான் இலங்கை அரசாங்கத்தின் மெத்தனத்துக்கு முழுக்காரணம். சர்வதேசம் இப்போதாவது இதை உணருமா?




விரிகுடாவில் காற்றழுத்தம்

# வடக்கு மாகாணத்தில் மழைக்குச் சாத்தியம்!

## மீனவர்களுக்கும் எச்சரிக்கை

**கொழும்பு, நவ. 30**

**தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள காற்றழுத்தத் தாழ்வுநிலை எதிர்வரும் நாள்களில் புயலாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உருவாகிக் கொண்டிருக்கும் இந்தப்புயலால்இலங்கையின் எந்தவொரு பகுதிக்கும் நேரடியான பாதிப்புகள் இல்லை. ஆனாலும் இந்தத் தாழமுக்கத்தால் ஏற்படும் மழை கிடைக்கக்கூடிய வலயத்தில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் பல பகுதிகள் உள்ளடங்குகின்றன.
எதிர்வரும் 3ஆம் திகதிவரை கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது. இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் தென்கிழக்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ச)

# பொழுதுபோக்கு மையமாக மாறவுள்ளது கொழும்பு

கொழும்பு, நவ. 30
கொழும்பை ஒரு பொழுதுபோக்கு மையமாக மாற்ற வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கொழும்பு அரும்பொருள் காட்சியகத்துக்குச் சென்றால் இரண்டு நிமிடங்களில் திரும்பிவிடலாம். கங்காரமய விகாரைக்கு போனால் உடனே திரும்பிவிடலாம். நாங்கள் என்ன செய்திருக்கிறோம்? சுதந்திர சதுக்கப்பகுதியில் உணவு, இசை போன்ற விடயங்களை அறிமுகப்படுத்த வேண்டும். உல்லாசப் பயணத்துறை எமக்குப்புதிதல்ல. அநுராதபுர காலத்திலிருந்து நாம் உல்லாசப்பயணிகளை வரவேற்று வருகிறோம்.
எமது பாரம்பரிய உணவுகளுடன் மேலைத்தேய உணவு வகைகளையும் நாம் தயாரிக்க வேண்டும். உல்லாசப்பயணத்துறையில் முதலீடு செய்வதற்கு புலம்பெயர்ந்தவர்கள் முன்வர வேண்டும். கண்டி போகம்பரை சிறைச்சாலையை ஓர் உல்லாச விடுதியாக மாற்றுவதுடன் ஒரு விடுதித்துறை கல்லூரியையும் அங்கு ஆரம்பிக்க வேண்டும். எமது சிந்தனைகளில் மாற்றம் ஏற்படவேண்டும் - என்றார். (ஒ-6)

## நாளை

01.12.2023
**வெள்ளிக்கிழமை**
**கார்த்திகை 15**
சுபநேரம் : 06.14 - 07.44
ராகுகாலம் : 10.44 - 12.14

## நாளொரு நல்வார்த்தை

ஒரு செயலுக்குக் கிடைக்கும் வெகுமதியானது மற்றொரு செயலை நிறைவேற்றத் தேவையான சக்தியாகின்றது.
***ஆங்கிலேய எழுத்தாளர் ஜோர்ஜ் எலியட்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம் நினைவுகளின் பிடிமானங்களோடு நாம்

இதயங்கள் இரணமான இருபத்திமூன்று ஆண்டுகளில்

அன்றிலொன்று இணைபிரிந்த இருபத்தேழு ஆண்டுகளில்





உதயம் 03.08.1942 அஸ்தமனம் 30.11.2000

மண்மகிழ 19.10.1976 கண் நெகிழ 21.08.1996

**அமரர்**
**இராசு செல்வரட்ணம்**
**(சித்தப்பா)**

(ஸ்தாபகர், அம்பாள் மரக்காலை,
வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்.

**அமரர்**
**செல்வி றஜனி**
**செல்வரட்ணம்**

(A/L 1995, வர்த்தகப்பிரிவு மாணவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி)

விழிகளின் துளிகளை மொழியாக்கி
வலிகளின் ரணங்களைக் கருத்தாக்கிப்
புரிதலின் துணையோடு வாழ்கின்றோம் – உம்
'பரிவு' கள் ஒவ்வொரு நொடியும்
நம் வழித்துணை என்பதால்......

"செல்வபதி"
**256,** நாவலர் வீதி,
**இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CR38578) 1-6

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் கோப்பாய் சந்தியில் அமைக்கப்பட்ட பாரம்பரிய உணவகத்தில் பாரம்பரிய உணவினை தயாரித்து விற்பனை செய்வதற்கான விண்ணப்பம் கோரல்**

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் கோப்பாய் சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள பாரம்பரிய உணவகத்தில் பாரம்பரிய உணவுகள் / சிற்றுண்டிகள் என்பவற்றை தயாரித்து விற்பனை செய்வதற்கு யாழ். மாவட்டத்தை வதிவிடமாக கொண்ட ஆர்வமுடைய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்**

1. குறித்த உணவகத்தில் வைத்தே சகல உணவுகளும் தயாரிக்கப்படல் வேண்டும்.
2. பாரம்பரிய உணவுகள் / சிற்றுண்டிகள் மட்டுமே தயாரித்து விற்பனை செய்ய முடியும்.
3. பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
4. ஆகக்கூடியது பதினாறு (16) பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு உணவு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.
5. சமையலுக்கு தேவையான சகல தளபாட, உபகரண வசதிகளும் சபையினால் ஒழுங்கமைக்கப்படும்.
6. வயது எல்லை 18 தொடக்கம் 60 வயது வரையாகும்.
7. காலை 06.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரையும் பிற்பகல் 02.00 மணி முதல் இரவு 08.00 மணி வரையும் நேர மாற்றத்துடன் வேலை நடைபெறும்.
8. நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு இடம்பெறும்.
9. வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்டு பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
 - அத்துடன் பெண் தலைமைத்துவமாக இருப்பினும் முன்னுரிமை வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்களை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் தலைமை அலுவலகத்தில், 27.11.2023 ஆம் திகதி முதல் அலுவலக நேரத்தில் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 27.12.2023ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 021-2058867 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமோ தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**
**30.11.2023**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 22 . 02 . 1939



ஆனைமுகன் அடியில் 11 . 12 . 2022

**சாரதாம்பாள் மகேஸ்வரசர்மா**

(திதி: கார்த்திகை மாதம் அபரபட்ச திருதியை)


எம்மை சீராட்டி பாராட்டி வளர்த்த இனிய அன்னையே
பன்னிரண்டு திங்கள் பறந்தோடி சென்ற போதும்
எம் இரண்டு கண்களிலும் நீர் வற்றவில்லை - இன்னுயிர்
பல்லாண்டுகள் பல வந்தபோதும் - உங்கள்
பிரிவுத்துயர் மாறாது எம் துயர் தீராது - மீண்டும்
பிறப்பு உண்டெனில் எம் அன்னையராக வரவேண்டும்.

**வரத்தலம் கற்பக விநாயகர் கோவிலடி,**
**பன்னாலை தெல்லிப்பழை.**

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 10 . 1959



மறைவு 10 . 12 . 2022

**கார்த்திகேசு அம்பிகாபதி**

(வெற்றிலையூர், சவூதி அரேபியா TASECO - TMSS.A.LTD Driver,
முன்னாள் முகாமையாளர் Everyday குடிநீர் விநியோகம்)

அப்பா பறந்தது பன்னிரு மாதம்
பார்த்திருக்க பிறந்தது ஓராண்டு
ஆறவில்லை எங்கள் மனம் அப்பா
என்னுடைய மனைவி பிள்ளைகள் என
கண்ணுக்குள் வைத்து பாதுகாத்து விட்டு
அப்பா நீங்கள் எம்மை விட்டு எங்கே போனீங்கள்
போகும் வழியெல்லாம் உங்கள் முகம் தெரிவதென்ன அப்பா
உங்கள் பேர் சொல்லும் வகையில் உங்கள்
சந்ததியை கடவுள் பயத்துடனும் கண்ணியத்துடனும்
வாழக் கற்றுக் கொடுத்தீர்களே அப்பா
காவல் தெய்வமாய் எங்களோடு என்றும்
நீங்கள் இருப்பதை எண்ணி உங்கள் நினைவுகளோடு.

**பழையகண்டி,**
**காரைநகர்.**

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## நித்தியானந்தன் கஜலக்ஷன்



தோற்றம் 25.07.1994 மறைவு 28.11.2023

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தன் கஜலக்ஷன் (28.11.2023) செவ்வாய்க் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் நித்தியானந்தன் தர்மேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கீர்த்தனாவின் (அமெரிக்கா) அன்புச் சகோதரனும், சஞ்சீவனின் (அமெரிக்கா) மைத்துனரும், தவமணி, பரமேஸ்வரி, சஸ்வேஸ்வரி (இந்தியா), அமரர் செல்வானந்தனின் பெறாமகனும், மகேந்திரன், கயிலைநாதன் லோகேஸ்வரி, அமரர்கள் பரமேஸ்வரி, கமலேஸ்வரி, நகுலேஸ்வரி, மாணிக்க வாசகர் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 257 1121**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ கட்டுடை சைவ வித்தியாசாலையின் மணிவிழா வாழ்த்துக்கள்



### திரு. கந்தையா இராஜலிங்கம் (ஆசிரியர்)

**சேவை விபரம்**

- 03.01.2000 - 26.03.2012 யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
- 27.03.2012 - 30.11.2023 வரை யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை

எமது ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறப்புற மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
யா/கட்டுடை சைவ வித்தியாசாலை

(cs.52006) (N.1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி மாவட்ட நீதிவான் மாண்புமிகு A. ஜுட்சன் அவர்கள் முன்னிலையில் 22/11/2023 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக (Justice of the Peace - whole Island) யா/ டிறிபேக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும், சமூக, சமய சேவையாளருமான

### திரு. நவரத்தினம் ஜெயகுமாரன்

அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
அவர்களுக்கு எமது சமூகம் சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:

- கௌரவ கலாநிதி லயன். S. மனோகரன் (அறிவிப்பாளர், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்)
- திரு. K. சிவானந்தம் (ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி, தென்மராட்சி)
- திரு. A. கைலாயபிள்ளை (ஓய்வுநிலை அதிபர், சாவகச்சேரி இந்து கல்லூரி)
- திரு. N. சர்வேஸ்வரன் (அதிபர், சாவகச்சேரி இந்து கல்லூரி)
- திரு. S. பவளகுமாரன் . (ஓய்வுநிலை அதிபர், நாவற்குழி ம. வி)
- திரு. K. குணசிங்கம் (ஓய்வுநிலை அதிபர், கச்சாய் ம. வி)
- திரு. K. கந்தசாமி (ஓய்வுநிலை அதிபர், மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை)
- திரு. K. மங்களேஸ்வரன் (ஓய்வுநிலை அதிபர், வரணி மத்திய கல்லூரி)
- திரு. K. வேலாயுதநாதன். (ஓய்வுநிலை ஆசிரியர், யாழ் /டிறிபேக்கல்லூரி சாவகச்சேரி.)
- திரு. S. கமலதாஸ் (ஆசிரியர் வீரசிங்கம் மத்திய கல்லூரி)


## ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவிற்கான கூட்ட அறிவித்தல்

## 03.12.2023 - ஞாயிற்றுக்கிழமை

மேற்படி எமது சங்கத்தின் பதினான்கு (14) கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவிற்கான பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 03.12.2023 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடாத்துவதற்கு சங்கத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த கிளைகளின் தகுதியுடைய அங்கத்தவர்களுக்கு தவிசாளரால் தனித்தனியாக கூட்ட அழைப்பு கடிதம் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாத தகுதியுடைய அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டம் தொடர்பான விபரம்**

| இல. | கிளைகள் | கிளையின் பெயர் | இடம் | கூட்டம் நடைபெறும் திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | கிளை - 01 | ஊர்காவற்றுறை | தலைமை அலுவலகம். ஊர். ப.நோ.கூ. சங்கம் | 03.12.2023 | மு.ப.10.00 |
| 02 | கிளை - 02 | பருத்தியடைப்பு | சனசமூக நிலையம், பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை. | 03.12.2023 | மு.ப.10.00 |
| 03 | கிளை - 03 | செபஸ்தியார் கோவிலடி | கிளை - 03 கட்டடம், புனித செபஸ்தியார் கோவிலடி.கரம்பொன். | 03.12.2023 | மு.ப.10.00 |
| 04 | கிளை - 04 | பாலக்காட்டுச் சந்தி | சனசமூக நிலையம், கரம்பொன் கிழக்கு. | 03.12.2023 | மு.ப.10.00 |
| 05 | கிளை - 05 | பொன்னாச்சிக்கடை | பொது மண்டபம் கிராம அபிவிருத்தி சங்கம், ஊர்காவற்றுறை. | 03.12.2023 | மு.ப.10.00 |
| 06 | கிளை - 06 | நாரந்தனை வடக்கு. | பொது மண்டபம், கிராம அபிவிருத்தி சங்கம் நாரந்தனை. வடக்கு. | 03.12.2023 | மு.ப.10.00 |
| 07 | கிளை - 07 | தம்பாட்டி | பொது மண்டபம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், தம்பாட்டி. ஊர்காவற்றுறை | 03.12.2023 | மு.ப.10.00 |
| 08 | கிளை - 08 | நாரந்தனை தெற்கு | பொதுக் கட்டடம் நாரந்தனை மக்கள் நலவாழ்வு சங்கம், நாரந்தனை மத்தி | 03.12.2023 | மு.ப.10.00 |
| 09 | கிளை - 09 | புளியங்கூடல் வடக்கு | மகாமாரி சனசமூக நிலையம், புளியங்கூடல் | 03.12.2023 | மு.ப.10.00 |
| 10 | கிளை - 10 | புளியங்கூடல் தெற்கு. | இந்தன் பிள்ளையார் கோவில் மண்டபம், புளியங்கூடல் | 03.12.2023 | மு.ப.10.00 |
| 11 | கிளை - 11 | சுருவில் | சனசமூக நிலையம், சுருவில் | 03.12.2023 | மு.ப.10.00 |
| 12 | கிளை - 12 | சரவணை | ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் நாரந்தனை கிழக்கு, சரவணை | 03.12.2023 | மு.ப.10.00 |
| 13 | கிளை - 13 | மெலிஞ்சிமுனை | இருதயராசா கோவில் மண்டபம், மெலிஞ்சிமுனை | 03.12.2023 | மு.ப.10.00 |
| 14 | கிளை - 14 | எழுவைதீவு | சங்க கிளைக் கட்டடம் எழுவைதீவு, ஊர்காவற்றுறை. | 03.12.2023 | மு.ப.10.00 |

கூ.அ.உ. ஆணையாளர் அலுவலகம்,
இல.857, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

ஒப்பம் - திரு.கிறகோரி சந்திரசேகரன்,
மா.கூ.அ.உ.ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.


## மணிவிழா வாழ்த்துக்கள்



ஆசிரிய சேவையில் 18.03.1998 தொடக்கம் 30.11.2023 வரை 25 வருடங்களாக அர்ப்பணிப்போடு பணியாற்றி இன்று ஓய்வுபெறும் ஆசிரியர்

### திரு.ஞானசேகரம் செல்வநாயகம்

அமைதி அன்பு திறமை இவற்றின் மொத்த வடிவமே
பெயருடன் சேர்ந்த செல்வம் போல
கல்விச் செல்வம் நிறைந்த பண்புடையோனே
தென்மராட்சி மண்ணின் கல்வி வளம் பெற உழைத்த பெரியோன்
எங்கள் சேதுகாவலர் கல்வித் தாயில் சேவை நிறைவுற்று
மணிவிழாக் காணும் நன்னாள் இது
சேதுகாவலரின் பெயர் விளங்க அல்லும் பகலும்
உழைத்த நாள்கள் பொன்னெழுத்தில் இருக்கும்
எல்லோருக்கும் இனியனாய் வாழ்வது அரிது
அந்தப் பண்புநிறை செல்வனின்
ஓய்வுகாலம் வளங்கள் நலங்கள் நிறைந்ததாய்
அமைய பெருமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

18.03.1998 - 08.04.1998 - யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
09.04.1998 - 07.09.2004 - யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
08.09.2004 - 31.06.2005 - யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்
01.07.2005 - 15.04.2014 - யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
16.04.2014 - 30.11.2023 - யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம்
யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

(cs 27122)(N.1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில்

### 2023 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் சித்தியடைந்தோர்



சு. அபிஷா
176 புள்ளிகள்



க. நிவின்சன்
160 புள்ளிகள்



பா. சாதனா
67 புள்ளிகள்
(விசேட தேவை அடிப்படையில்)

- 100 புள்ளிகளுக்கு மேல் 12 மாணவர்கள் சித்தி வீதம் 88 %
- மாணவர்களையும் வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பழைய மாணவர்கள்
யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்துக்கு வீடுகள் இந்தியா 2 ஒப்பந்தங்கள்

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் மலையகத்துக்கு 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்தியாவுடன் இரண்டு தனித்தனி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளன.

தேசிய வீட்டு வசதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுடனே தனித்தனி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இதுதொடர்பில் இந்தியத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில்,

இந்திய வீட்டுத் திட்டத்தின் நான்காம் கட்டமானது இலங்கையின் 11 மாவட்டங்கள் மற்றும் 6 மாகாணங்களை உள்ளடக்கியது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முதலிரண்டு கட்டங்களில் 46 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், பெருந்தோட்டப் பகுதிகளில் 4 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான மூன்றாம் கட்டப் பணிகள் நிறைவடையும் தருவாயிலுள்ளன.

இந்திய வீட்டுத் திட்டத்துக்கப்பால் இலங்கையின் 25 மாவட்டங்களில் பல்வேறு வீட்டுத் திட்டங்களின் கீழ் 2400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன - என்றுள்ளது. (ச-இ)

---

அரசாங்க அறிவித்தல்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

2023.11.01 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 2023.12.15 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப் பட்டுள்ளது.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
மாவட்டச் செயலாளருக்காக,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(CR 41271)A-1

---

## யாழ். மாநகர சபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் சிற்றுண்டிச்சாலைக்கு குத்தகைக்கான கேள்வி அறிவித்தல்

யாழ். மாநகரசபை வளாகத்தினுள் பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்துக்குச் சொந்தமான சிற்றுண்டிச் சாலைக் கட்டடமும், தளபாடங்களும் 01.01.2024 முதல் 31.12.2024 வரையான ஒரு வருட காலத்துக்கு குத்தகை வழங்குவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கேள்வி படிவக் கட்டணம் ரூபா 300 /- உம் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா 1000/- உம் பேரில் வழங்கப்படும் கேள்விப்படிவங்களில் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் மேற்படி அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் சேர்ப்பித்தல் வேண்டும்.
3. வருடாந்தம் ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 150 000/- (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்) ஆகும்.
4. **கேள்விப் படிவங்கள் 01.12.2023 பிற்பகல் 4.00 மணி விநியோகிக்கப்பட்டு 10.12.2023 நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப் படும்.**
5. **கிடைக்கப்பெறும் கேள்விகள் 11.12.2023 முற்பகல் 10.00 மணிக்குத் திறக்கப்படும்**
6. மேலதிக விபரங்களை யாழ். மாநகரசபை வளாகத்தினுள்ள இயங்கும் மேற்படி சங்க அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ.இராகவன்
செயலாளர்

(cr.41256) (N.1)

அ.தயான்
தலைவர்

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
30 - 04 - 1955



இறப்பு
26 - 11 - 2023

### நீலாத்தை கந்தசாமி (சிவம்)

வீமன்காமம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நீலாத்தை கந்தசாமி (சிவம்) கடந்த (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீலாத்தை - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் தங்கராசாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராஜசுலோசனாவின் அன்புக் கணவரும், செல்வி. சிவாநந்தினி (கனடா), சிவாகரன் (கனடா), நிரோஜி, ஜீவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசண்முகம், சரவணபவன், சத்தியகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரேஷ்மிகா, தஸ்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் மேற்கு சுன்னாக வீதியில் அமைந்துள்ள இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

077 041 7912
077 088 5652

(CS 27132) (K-1)

---

## வாடகைத்தாய் தேவை

குழந்தை இல்லாத தம்பதியினர் வாடகை தாய் மூலம் குழந்தை பெற்று கொள்ள விரும்புகின்றனர்.. வாடகை தாயாக விரும்புகின்றவர் எம்மை தொடர்பு கொள்ளவும். வயது எல்லை 25 முதல் 35 வரை உங்கள் விபரங்கள் எல்லாம் இரகசியமாக பாதுகாக்கப்படும். **மேலதிக விபரங்களுக்கு**

**சசி : 00447555593074 Whats App மட்டும்**

---

## தவறிவிட்டது

**076 683 9326** இலக்க ஐ போன் 28.11.2023 மாலை மட்டுவில் சிவன் கோவில் வீதியிலிருந்து கல்வயல் ஊடாக சாவகச்சேரி வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். **சன்மானம் வழங்கப்படும்**

தொடர்பு : **077 838 7412**

41265 (AK-1)

---

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2024 ஆம் ஆண்டிற்கான 2வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், பொதுமலசல கூடங்கள் என்பனவற்றை 2024.01.01ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 30.11.2023 – 07.12.2023 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 08.12.2023 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 08.12.2023 பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,412,500.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 165,200.00 | |
| 3 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 391,120.00 | 250.00 |
| 4 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 50,000.00 | 250.00 |
| 5 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 250,550.00 | 250.00 |
| 6 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 200,000.00 | 250.00 |
| 7 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 61,750.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை | 3,000.00 | 30,000.00 | 27,564,700.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 50,150.00 | |
| 3 | இணுவில் கோழிறைச்சிக்கடை | 750.00 | 7,500.00 | 291,000.00 | 250.00 |
| 4 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,400.00 | |
| 5 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| 6 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 370,500.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 750.00 | 7,500.00 | 625,001.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2023.12.15ம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2023.12.15 ம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. கேள்வித்தொகைக்கு மேலதிகமாக அரசினால் விதிக்கப்படும் ஏனைய வரிகளையும் செலுத்தப்படவேண்டும்
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி **நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது**
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

**30.11..2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஸாவிலிருந்து

## தாயகம் திரும்பியது இலங்கைக் குடும்பம்

கொழும்பு, நவ. 30
காஸாவில் சிக்கியிருந்த நான்கு பேர் கொண்ட இலங்கை குடும்பத்தினர் பத்திரமாகத் தாயகம் திரும்பியுள்ளனர்.
எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலுள்ள எகிப்திய அதிகாரிகளுடன் இலங்கைத் தூதரகம் மேற்கொண்ட தொடர்பாடல்களையடுத்தே வெளிவிவகார அமைச்சும், புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பும் இணைந்து இந்த மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன. (ம-6)

## இந்திய மீனவர் அத்துமீறல் கைதுகளே கட்டுப்படுத்தும்

யாழ்ப்பாணம், நவ. 30
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்தியக் கடற் றொழிலாளர்களைத் தொடர்ச்சியாகக் கைதுசெய்வதன் மூலம்தான், அவர்களின் வருகையைக் கட்டுப்படுத்தமுடியும் என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் புனிதப் பிரகாஷ் தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துமாறு பல வருடங்களாகக் கோரிக்கை முன்வைத்தும் எவ்வித பயனும் எமது மீனவர்களுக்குக் கிடைக்கவில்லை.
அண்மையில்கூட யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்னால் மீனவ அமைப்புகள் ஒன்று சேர்ந்து கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து இரு நாட்டுத் தலைவர்களுக்கும் கோரிக்கைக் கடிதத்தைக் கையளித்தோம்.
இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றால் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகளை இலங்கைக் கடற்படை மேற்கொள்ளவேண்டும்.
கைதுகள் குறைக்கப்படுமாயின் மீனவர்களின் அத்துமீறிய வருகை அதிகரிக்கும். இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படும் - என்றார். (ம-27-20)


காற்பந்தாட்டம்

# முல்லைத்தீவு லீக்குக்கு விதிக்கப்பட்டது தடை!



**முல்லைத்தீவு, நவ. 30**
**முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக், இலங்கை உதைபந்தாட்டக் கூட்டமைப்பால் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக் தொடர்பில் இலங்கை உதைபந்தாட்ட கூட்டமைப்புக்குக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே இந்தத் தடை விதிக்கப்பட்டது. முறைப்பாடு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக் குழுவினர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். அதுவரை முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் போட்டிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மாவட்ட உதைபந்தாட்ட லீக்குக்கு எதிரான முறைப்பாடு விசாரணை செய்யப்பட்டு பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை அனைத்துப் போட்டிகளையும் நிறுத்துமாறு மாவட்ட கால்பந்தாட்ட லீக்குக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-19)




## விழிப்புணர்வு நாடக அரங்கு

கிளிநொச்சி, நவ. 30
'போதைப் பொருள் அற்ற தேசத்தை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நாடக அரங்கின் முதல்நாள் நிகழ்வு கிளிநொச்சி தருமபுரம் பகுதியில், பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் இணைப்பாளர் வள்ளிபுரம் வாசுகி தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ரி-113)

## 2 மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தடை

கொழும்பு, நவ. 30
இரண்டு முன்னணி மதுபான உற்பத்தி நிலையங்களுக்குத் தற்காலிகத் தடைவிதிக்கப்பட்டிருப்பதாக மதுவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது. வரி செலுத்தாத காரணத்தாலேயே மேற்படி நிறுவனங்களின் உற்பத்திகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மதுவரித்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-6)



தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தில் புத்தக அரங்க விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன. (ரி)

## பெருங்கதை படிப்பு

சாவகச்சேரி, நவ. 30
சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் கதை படிப்பும் இலட்சார்ச்சனையும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 21 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.
பிள்ளையார் கதை படிப்பு நிறைவில் திருவெம்பாவை உற்சவம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-9)



## பாரம்பரிய உணவுக் கண்காட்சி

முல்லைத்தீவு - மாந்தை கிழக்குப் பிரதேச செயலகம் மற்றும் 'றகமா' நிறுவனமும் இணைந்து நடத்திய பாரம்பரிய உணவுக் கண்காட்சி மாந்தை கிழக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலாளர் ம.ஜெபமயூரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் முல்லைத்தீவு முன்னாள் மேலதிக மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரஞ்சனா நவரத்தினம், 'றகமா' நிறுவனச் செயலாளர் நாயகம் எம்.எப்.மரிக்கார், பாண்டியன் குளம் ஆயுள்வேத வைத்திய அதிகாரி இ.கஜந் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (ரி-75)

## விழிப்புணர்வு கலந்துரையாடல்

கிளிநொச்சி, நவ. 30
கிளிநொச்சி மதகுருமார்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மதத் தலைவர்களால் பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.
கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், உதவி மாவட்டச் செயலர் ஹ.சத்தியஜீவிதா, கலாசார உத்தியோகத்தர்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள், மத குருமார்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், வழிபாட்டுத்தலங்களின் நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வரிப்பணத்தில் திருடருக்கு ஓய்வூதியம்

ஐ.ம.ச. கொதிப்பு

**கொழும்பு, நவ. 30**

**மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன் ஆகியோர், பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டுமென உயர் நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் இவர்களுக்குத் தொடர்ந்து ஓய்வூதியக்கொடுப்பனவு வழங்குவது நியாயமானதா? -இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கிக்குள் திருடர்கள் உள்ளார்கள் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. மத்திய வங்கிக்குள் அதியுயர் பாதுகாப்புக்கு மத்தியில் நிதி காணாமற் போகிறது என்றால் மக்கள் எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள். ஆகவே பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களான அஜித் நிவாட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன் ஆகியோருக்கு மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு தொடர்ந்து ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவது நியாயமானதா? - என்றார்.

இதற்குப் பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, அவர்களது ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர், சட்டமா அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடி ஒரு தீர்மானம் எடுக்கப்படும் - என்றார்.

(ச-இ)

## சட்டப்பரிசீலனைக் குழுவில் முன்னாள் செயலர்!

நிகழ்நிலை காப்புச்சட்டம், இலத்திரனியல் ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் போன்ற சட்டங்களைப் பரிசீலிக்கும் குழுவில் யாழ்ப்பாண முன்னாள் மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகமும் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-6)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

**cocker spaniel,**

45 நாள் குட்டி.

இரண்டு ஆண்குட்டிகள். **vaccinated, De wormed**

தொடர்பு : **077 077 5494** CS 27133 (S-1)

## மகாஜனா முதலிடம்

*யாழ்ப்பாணம், நவ.30*

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட தேசிய இளைஞர் விழா சிறந்த இளம் பாடகர் விருதுக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி மதுவந்தி தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

(ரி-9)



ஓம் விராட் விஸ்வட் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

மண்ணுலகில் 04 - 12 - 1941



விண்ணுலகில் 28 - 11 - 2023

**சுந்தரம் திருநாவுக்கரசு**

**(பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஓய்வு ஊழியர், சிந்தாமணி முருகன் ஆலய பரிபாலசபை உறுப்பினர்)**

சாவகச்சேரி சாரதா வீதியை பிறப்பிடமாகவும், சண்முகம் வீதி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட சுச்தரம் திருநாவுக்கரசு அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2023) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் அம்பிகை அம்மா தம்பதியினரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கநேசம் தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், ஜெய்கிருஷ்ணன், சுபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரன், லக்மிஸ்ரீ ஆகியோரின் அன்பு மாமனாரும், பராசக்தி, ராணி, கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான குஞ்சன், பாலசிங்கம், தேவராசா மற்றும் ஸ்ரீதரன் (பிரான்ஸ்), தியாகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோமசுந்தரம், யோகநாதன், தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற முருகதாஸ் மற்றும் செந்தில்நாதன் (இத்தாலி), காங்கேஜன், அன்னலஷ்சுமி, பேரின்பராணி, ராஜபூபதி, சரோஜினி அம்மா, காந்திமதி, ஹேமடாலினி ஆகியோரின் அத்தானும், கலாமணி, தவரஞ்சினி, சந்திரசேகரம், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ஸ்ரீதர் மற்றும் கிருபாகரன், சுபாகரன் ஆகியோரின் சகலனும், யதுஷன், கவிஷன், நிஷாகர், சஞ்சய், விஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்க்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

**சண்முகம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்**

(CR 41269)(AK-1) **077 672 9226, 077 984 2327**

# மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 11 . 1958



இறப்பு 28 . 11 . 2023

**ஜினதாசா தேவராசா**

**(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார், முல்லைத்தீவு வட்டாரக் கணக்காளரும், முல்லைத்தீவு சாலை முகாமையாளர்)**

மடத்தடி அல்வாய் கிழக்கை பிறப்பிடமாகவும், வவுனியா பண்டாரிக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜினதாசா தேவராசா அவர்கள் கடந்த (28.11.2023) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜினதாசா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசேந்திரம், தனபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னபூரணாதேவி (பவானி) அவர்களின் அன்புக் கணவரும், தர்ஷனின் (இலங்கை போக்குவரத்துச் சபை, வவுனியா சாலை உத்தியோகத்தர்) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராஜகருணா, பாக்கியராசா, மற்றும் ஜீவராசா சாந்தரூபினியின் (ராணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மல்லிகாதேவி, பாக்கியம், காலஞ்சென்ற சாந்தாதேவி, காலஞ்சென்ற ஞானச்சந்திரன், ரஞ்சினி (கனடா), ரஞ்சன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், சங்கீதா (சுவிஸ்), ரகுபதி (கனடா) ஆகியோரின் சகலனும், நிலாந்தினி, சுஜேந்திரன், ஜான்சி, விஜிதா, காலஞ்சென்ற விஜிந்தன், சபேசன், தர்ஷினி ஆகியோரின் சித்தப்பாவும், பிரவீன், கிரிஷா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும், மகிந்தன் (லண்டன்), பிரகாஸ், பிரசாத் (கனடா), மேசி, டெய்சி, அக்ஷயா (சுவிஸ்), பவித்திரா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2023) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பண்டாரிக்குளம், வவுனியா, அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: [illegible] (மகன்)

**077 860 6660**

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 02 . 1928



மறைவு 29 . 11 . 2023

**இராஜதுரை சிவக்கொழுந்து**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், (நவாலி) மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை சிவக்கொழுந்து அவர்கள் நேற்று (29.11.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லம்மா, தர்மலிங்கம், சேவையர் கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகராஜா, காலஞ்சென்ற பவளராணி, தவராணி, ஜெயரூபன் (UK), வசந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியலட்சுமி, தனபாலச்சந்திரன் (சோதி), மோகனவேல்நாயகி (UK), காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சர்வேந்திரன் - தாரணி (UK), சதீஸ் - ரவிசாந்தி, எழிலன் - யஜீவா, அபர்ணா, சுரேஸ்குமார் - கோமதி (UK), கேதீஸ்வரன் - நாகலோஜினி, திருவருள் - யசோதா (UK), பிரதீபன் - லக்ஷனா (UK), சர்ஹிதன் - தர்ஷனா (UK), தனுஜா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், தர்ஷன், ஆருஷன், வர்ஷினி, கிருத்திக், கிருத்திகா, கோகுல்நாத், கவின், ரக்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.**

**குடும்பத்தினர்.**

(CS 27135)S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி - பொன்னாலை கரையோரத்தை இலக்கு வைக்கும் வனவளத் திணைக்களம்

கொழும்பு, நவ.30

யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவை மையமாகக் கொண்டு அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரப் பகுதி வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வனப் பிரதேசமாக ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட செயலாளரால் சங்கானை பிரதேச செயலாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரப் பகுதி பொது அமைப்புகளுடன், பிரதேச செயலாளரால் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்துள்ளதாவது:-

இந்தப் பகுதி மக்கள் அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரப் பகுதியை வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வளப் பிரதேசமாக ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கரையோரப் பகுதி மக்களின் வாழ்வாதாரமே கடற்கரையை நம்பியே காணப்படுகின்றது. மாட்டுவண்டிச் சவாரித்திடல், சுடுகாடுகள், விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்மொழிவை முற்றிலும் நிராகரிக்கிறோம்.

அந்தப் பகுதியை வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு வழங்கினால் விகாரைகள், சிங்களக் குடியேற்றம் வரவும் வாய்ப்பு உள்ளது என அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் இந்த முன்மொழிவை நிராகரித்து வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பவேண்டும். இல்லையேல் இதற்கு எதிராகப் போராட்டம் நடத்துவோம் - என்றார். (எ-20)

## நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி






யாழ்ப்பாணம், நவ.30

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நீரிழிவு விழிப்புணர்வும் நடைபவனியும் இரத்தப் பரிசோதனையும் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை சிவன் ஆலய முன்றிலில் ஆரம்பமான நடைபவனி, யாழ். பஸ்நிலையம் சென்று, அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனை வீதி ஊடாக கார்கிள்ஸ் கொம்பிளெக்ஸ் பகுதியைச் சென்றடைந்து நிறைவடைந்தது. அங்கு இலைக் கஞ்சி வழங்கப்பட்டதுடன், இலவச குருதிப் பரிசோதனையும் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றரும், சிறப்பு விருந்தினராக அகில இலங்கை லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவர் லயன் தேவா டி பீற்றர், வடக்கின் முதலாவது ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நடைபவனியில் வடக்கில் உள்ள சகல லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள் மற்றும் லியோ கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (எ-இ)



## காங்கேசன் துறைமுகத்தை பார்வையிட்ட இந்தியத்தூதுவர்

யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பால்கே நேற்றுப் புதன்கிழமை காங்கேசன் துறைமுகப் பகுதிகளைப் பார்வையிட்டார். காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதன் கட்டுமானங்கள் மற்றும் தேவைகள் தொடர்பாக யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் தூதுவருக்கு விளக்கமளித்தனர். (எ-27)

### மனிதப்புதைகுழி...

புதைகுழி முற்றுமுழுதாக ஆராயப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே அனைவரும் உள்ளனர். எதிர்வரும் வருடம் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன என்று மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளுக்கு பொறுப்பான சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

மூன்றாம் கட்ட அகழ்வு ஆய்வுப்பணிகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அகழ்வு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சட்டத்தரணி வி.கே. நிரஞ்சன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமானது. இதுவரை முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என மொத்தமாக 20 நாள்கள் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வு நடவடிக்கைகளில் 39 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் ஆடைகள், துப்பாக்கிச் சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பின் இலக்கத் தகடுகள் உட்பட பல தடயப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

புதைகுழியானது கொக்கிளாய், முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் 1.7 மீற்றர் நீளத்துக்கு நெடுஞ்சாலையை நோக்கி விரிவடைந்துள்ளமை 'ஸ்கான்' பரிசோதனை ஊடாக தெரியவந்துள்ளது என்று மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளுக்குப் பொறுப்பான சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிமன்றில் இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கு பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த அகழ்வுப் பணிகளை இலகுபடுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் ஒரு அதிகாரி நியமிக்கப்படவுள்ளார். அதற்கான உத்தரவை நீதிவான் மாவட்டச் செயலருக்கு வழங்கியுள்ளார். பகுப்பாய்வுகள் டிசெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-இ)

### போலி...

றியப்பட்டதை அடுத்து யாழ்.மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணறோஜன் தலைமையிலான பொலிஸ் குழு கிளிநொச்சியைச் சேர்ந்த இருவரைக் கைது செய்தது. அவர்களிடம் கடந்த 6 மாதங்களாக மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டு 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-எ-26)

### பரிஸ்...

இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் இணைத்தலைமையைக் கொண்டுள்ளது. இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு கடன் மறுசீரமைப்புக்கான முக்கியமான விடயங்கள் தொடர்பான இணக்கத்தை வெளியிட்டுள்ளன என்று பரிஸ் கிளப் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### அம்மன்...

அம்மன் சிலை, அம்மன் தாலி, அம்மனின் தோடு உட்பட ஒன்றரைப் பவுண் நகைகள், உண்டியல் பணம் என்பன திருடப்பட்டுள்ளன என கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-எ-26-20)

### இளைஞர்...

பொலிஸார் தெரிவித்தனர். இவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபரிடம் இருந்து 16 எரிவாயு சிலிண்டர்கள், ஒரு நீர் இறைக்கும் மின் மோட்டர், ஒரு சைக்கிள், கதிரைகள், தங்கச் சங்கிலி, வயர் சுருள்கள் எனப் பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

முதியவர்கள் உள்ள வீடுகளை இலக்கு வைத்தே இவர் திருட்டுகளை மேற்கொண்டுள்ளார் என்றும், சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் எனவும் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-19)

### மல்கம்...

இது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமதிக்கும் செயல் என்றும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்களின் அக்கறை தொடர்பில் எந்த அக்கறை இல்லை என்பது தெளிவாகின்றது எனவும் பேராயர் விசனம் வெளியிட்டுள்ளார். (அ-எ-இ-44)

### பொலிஸ்மா...

கடந்த 24ஆம் திகதி ஓய்வு பெற்றிருந்த நிலையில், இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு 23ஆம் திகதி பொலிஸ் சேவையில் இணைந்த தேசபந்து தென்னக்கோன் 2019 நவம்பர் 20 ஆம் திகதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். 2032ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி இவர் பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெறுவார்.

இவர் ராஜபக்சக்களுக்கு நெருக்கமானவர் என்று விமர்சிக்கப்படுபவர் என்பதுடன், கடந்த அரகலய போராட்டத்தின் போது அவர் மீது தாக்குதலும் நடத்தப்பட்டிருந்தது.

அதேவேளை, பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்பவர்கள் 3 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகிக்கமுடியாது என்று அரசு புதிய சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. (அ-எ-6-44)

### புலிகள்...

உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்று கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மக்கள் ரணிலை நம்புகிறார்களாம்

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 30**
**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிக நம்பிக்கை உள்ளது என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போர் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்காக வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பல வருடங்கள் நிலவிய போரை மஹிந்த ராஜபக்ச முடிவுக்கு கொண்டுவந்தார். போர் நிலவிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு நீதியை நிலைநாட்டவே மேற்படி திட்டங்கள் அவரால் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு, கிழக்குப் பகுதியில் உள்ள மக்களின் ஆதரவு தமக்குக் கிடைக்காத போதிலும் நீதியை நிலைநாட்ட அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு மக்களுக்குத் தற்போதைய ஜனாதிபதிமீது அதிக நம்பிக்கை உள்ளது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது- என்றார். (ஒ-44)



# இலங்கையின் தங்கம் பாம்பனருகே பறிமுதல்

கொழும்பு, நவ. 30
இலங்கையிலிருந்து படகுமூலம் கடத்திச்செல்லப்பட்ட 8 கிலோ தங்கம் இந்தியாவின் பாம்பன் அருகே நேற்று புதன்கிழமை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மத்திய சுங்கத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட ரோந்துப் பணியில் இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் மதிப்புச் சுமார் 5 கோடி 20 இலட்சம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மத்திய சுங்கத்துறையினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# நீர்வேலியில் விபத்து;

## சாரதி மருத்துவமனையில்



நீர்வேலி - இராசவீதி மாசுவன் சந்திப்பகுதியில் இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் வாகனச் சாரதியொருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று புதன் கிழமை நண்பகல் நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நவக்கிரி நோக்கி வந்த கப்ரக வாகனமும் அச்செழு பகுதியிலிருந்து வந்த கடல் உணவு உற்பத்தி நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனமுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்துத் தொடர்பில் விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-23)

**விஷ்டம்**
**தொழினுட்பக் கல்லூரி**
**A/L 2023 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கு**
**விசேட கருத்தரங்கு ஆரம்பம்**

| | |
|---|---|
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | -1,2,3 |
| பொறியியல் தொழினுட்பம் | - 4,5,6 |
| உயிர் முறைமைகள் தொழினுட்பம் | - 5,6 |
| ICT, Agri, Maths, Geo | - 9,10,11 |

தொடர்புகளுக்கு- 077 248 7774/076 552 9093
CR 41276 A-1

**MTC**
**Group and Personal Classes**
**தரம் 6 - 11 வரை**
தமிழ் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தரம் 6 மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
**02.12.2023 சனிக்கிழமை 1.00pm**
நிர்வாகி : R. Mohan
பழனியாண்டவர் கோவிலடி, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு
தொடர்புகளுக்கு :
**074 130 1637, 074 360 2238**

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 . 02 . 1952 | 29 . 11 . 2015 |

## திருமதி தர்மலக்ஷ்மி சூரியகுமார்

**திதி : சங்கடகர சதுர்த்தி**

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடைமை போதித்து பக்குவமாய் பாரினிலே
வாழ வழி நடத்தினீர்கள் அம்மா
ஆதரவற்றோருக்கு உதவிட வேண்டுமென
அறவழி காட்டினீர்கள் அம்மா
நீங்கள் எம் கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் நினைவுகளில் என்றும் நிலையாய்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் அம்மா

**என்றும் உங்கள் நினைவுடனேயிருக்கும்**

**72, அச்சுக்கூட வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**ந. சூரியகுமார் (கணவர்)**
**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

(CS 22132 ) (3/6)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 31 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல். குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**
**076 213 7239**
(CS 27104) A-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org